**தமிழக சட்டப்பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 11.5.2012**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜனநாயகத்தின் மூன்றாவது தூணாக விளங்கும் நீதித் துறை சிறப்பாக செயல்பட வேண்டும் எனில், நீதிமன்றங்களுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம் ஆகும்.

இந்த வகையில், பாரம்பரியமிக்க பழைய நீதிமன்றக் கட்டடங்கள் தொன்மை மாறாமல் புதுப்பொலிவுடன் விளங்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், சென்னை நகரில் இயங்கி வரும் பழமை வாய்ந்த ஜார்ஜ் டவுன் நீதிமன்றம், சைதாப்பேட்டை நீதிமன்றம், எழும்பூர் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள சிறுவழக்குகள் நீதிமன்றம் ஆகிய கட்டடங்களுக்கு 22 கோடி ரூபாய் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழகத்தில் வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்கென படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டும் வகையில், முதற் கட்டமாக, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் அறிவிக்கப்பட்டு தொடங்கப்படாமல் இருந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் திண்டிவனம் மெயின்ரோடு, ஜக்கம்பேட்டை கிராமத்தில் 8.15 ஏக்கர் நிலப்பரப்பில், 17 கோடியே 31 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

இதன் மூலம், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில், பல்வேறு அரசு கட்டடங்கள் மற்றும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் 8 நீதிமன்றங்களும் இந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் செயல்பட வழிவகை ஏற்படுவதோடு, அனைத்து நீதிபதிகளுக்கும் குடியிருப்புகள் கிடைக்க வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

******